# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்
# உலக தூதுரைப் பணி நாள் செய்தி - 2024
## 20 அக்டோபர் 2024

# அனைவரையும் அழைத்து வர... பணியாளர்களாய் பயணப்பட...

**(தமிழாக்கம் : சீயோன் ஆன்மிக மையம், ஓசூர், தருமபுரி மறைமாவட்டம்)**

அன்பான சகோதரரே,சகோதரிகளே!

இந்த ஆண்டின் உலக தூதுரைப் பணி நாளுக்குரிய பொருளாக மத்தேயு நற்செய்தியில் காணப்படும் திருமண விருந்து உவமையைத் தெரிவு செய்துள்ளேன். திருமண விருந்துக்கு அழைப்புப் பெற்றவர்கள் அந்த அழைப்பை நிராகரித்து விட்டபோது, உவமையில் வரும் முதன்மைப் பாத்திரமான அரசர், தம் பணியாளர்களிடம், ‘‘எனவே, நீங்கள் போய், சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்’’ (மத் 22:9) என்று கூறுகிறார். இந்த உவமையின் சூழமைவு மற்றும் இயேசுவின் வாழ்க்கைச் சூழலை வைத்து இந்த நற்செய்திப் பகுதிபற்றிச் சிந்திக்கும்போது நற்செய்தி அறிவிப்புப் பணிபற்றிய முக்கிய அம்சங்களை நாம் தெளிந்து தேர்ந்திடமுடியும். கிறீஸ்துவின் தூதுரைப் பணியாளர்கள் என்ற முறையில் 'ஒன்றிப்பு, பங்கேற்பு, தூதுரைப் பணி' என்ற முப்பரிணாமக் குறிக்கோளுடனான கூட்டியக்கப் பயணச் சூழலில் இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்புப் பணி செய்வதில் மீள்கவனம் செலுத்த முயற்சிக்கும்போது இந்த அம்சங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

1. <u>‘‘நீங்கள் போய்… அழைத்து வாருங்கள்’’</u>

**தூதுரைப் பணி என்பது ஆண்டவர் வழங்கும் விருந்துக்கு அனைவரையும் விரைந்து அழைத்து வருவதாகும்.**

அரசர் தம் பணியாளர்களுக்கு இடும் ஆணையில் வரும் ‘‘நீங்கள் போய்’’, ‘‘அழைத்து வாருங்கள்’’ என்ற சொற்கள் தூதுரைப் பணியின் மையப் பண்பை வெளிப்படுத்துகின்றன.

திருமணத்திற்கு அழைப்பு பெற்றவர்களை அழைத்துவர, பணியாளர்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தார்கள் (காண்.வ.3-4) என்பதை நாம் நினைவுகூர வேண்டும். தூதுரைப் பணி என்பது எல்லாரும் இறைவனைச் சந்தித்து அவரோடு உறவுகொள்ள, பணியாளர்கள் சலிப்பின்றி அனைவரையும் அணுகி அவர்களை அழைப்பதாகும். ஆம்,சலிப்பின்றி! சோர்வின்றி!!. ஆம் அழைக்கப்பெற்றவர்கள் கண்டுகொள்ளாமல் அழைப்பை நிராகரித்தாலும் இறைவன் தம் பேரன்பிலும் இரக்கத்திலும் மானிடரை எதிர்கொண்டு சந்தித்து, இறையாட்சியின் மகிழ்ச்சியில் கலந்துகொள்ள அவர்களை இடைவிடாமல் அழைத்துக்கொண்டே இருக்கிறார்; அதற்காகச் சலிப்பின்றி, தொடர்ந்து

பயணப்பட்டுக்கொண்டே இருக்கிறார். தந்தை இறைவனின் தூதரும் நல்லாயனுமான இயேசு கிறிஸ்து, காணாமற்போன ஆடுகளைாகிய இஸ்ரயேல் மக்களைத் தேடிச் சென்றார்; தூர விலகி நிற்கும் ஆடுகளைச் சென்றடைந்தார். (காண். யோவா 10:16) தம் உயிர்த்தெழுதலுக்கு முன்னரும் பின்னரும் இயேசு தம் சீடர்களிடம், ‘‘நீங்கள் போய்’’ என்று கூறிப் பணித்து அவர்களைத் தம் தூதுரைப் பணியில் ஈடுபடுத்துகிறார். (காண்.லூக் 10:3; மாற்:16:15) தன் பங்கிற்கு, திரு அவையும் ஆண்டவரிடமிருந்து பெற்ற தூதுரைப் பணி ஆணைக்குப் பிரமாணிக்கமாயிருந்து, உலகின் கடையெல்லைவரை சென்றடைந்து தூதுரைப் பணியைத் தொடர்கிறது. சிரமங்கள், தடைகள் எதிர்ப்படும்போதும் மனந்தளராமலும் களைத்துப்போகாமலும் பணியாற்றிக்கொண்டே இருக்கிறது.

இவ்வேளையில், கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று, தங்களுக்கு உரிய அனைத்தையும் துறந்து, தங்கள் தாய்நாட்டினின்று புறப்பட்டு நற்செய்தியைப் பெற்றிராத அல்லது சமீபத்தில் பெற்றுக்கொண்ட பகுதிகளுக்கு நற்செய்தியைக் கொண்டுசென்ற தூதுரைப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பு நண்பர்களே, உங்கள் தாராள அர்ப்பணிப்பு, ‘‘நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்’’ (மத் 28:19) என்று மொழிந்து தம் சீடர்களைப் பணித்த கிறிஸ்துவின் தூதுரைப் பணியின்பால் நீங்கள் கொண்டுள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டின் தெளிவான வெளிப்பாடாகும். உலகின் கடையெல்லைவரை நற்செய்தி அறிவிக்கும் பணிக்கென அழைப்புப்பெற்றுள்ள அனைவருக்கும் நம் நன்றியும் வேண்டுதல்களும் உரித்தாகுக.

ஒவ்வொரு நம்பிக்கையாளரும் வாழ்வின் ஒவ்வொரு சூழமைவிலும், இந்த உலகளாவிய தூதுரைப் பணிக்குச் சான்றுபகர அழைக்கப்பட்டுள்ளார் என்பதை மறக்கக்கூடாது. இதன் வாயிலாக, திருஅவை, தன் ஆண்டவரும் போதகருமான கிறீஸ்துவுடன் ஒன்றிணைந்து, இன்றைய உலகின் எல்லாச் சூழமைவுகளையும் தொடர்ந்து சென்றடைய இயலும். திருஅவையின் இன்றைய நிலை என்னவெனில், இயேசு தொடர்ந்து கதவைத் தட்டிக்கொண்டே இருக்கிறார். வெளியே இருந்து அல்ல, மாறாக உள்ளேயிருந்து தன்னை வெளியே போக விடவேண்டுமென்று -பல வேளைகளில், திருஅவை, ஆண்டவரைச் 'சிறையிடுகிற' திருஅவையாக, 'ஆண்டவர் எனக்குரியவர்' என வைத்துக் கொண்டு, அவரை வெளியே செல்ல அனுமதிக்காத திருஅவையாக மாறிவிடுகிறது. நம் ஆண்டவர், தூதுரைப் பணி செய்யவே வந்தார். அவரைப்போன்றே நாமனைவரும் தூதுரைப் பணியாளர்களாக விளங்க வேண்டுமென்றே விரும்புகிறார். எனவே, திருமுழுக்குப் பெற்ற நாமனைவரும் அவரவர் வாழ்க்கை நிலைக்கேற்ப, திருஅவை தான் உருவான தொடக்க நாள்களில் செயல்பட்டது போன்றே, புதிய தூதுரைப் பணி இயக்கத்தைத் தொடங்கி செயல்படுத்தவோமாக.

உவமையில் வரும் அரசர் தம் பணியாளர்களிடம் “நீங்கள் போய்” என்று மட்டும் கூறவில்லை. “திருமணத்துக்கு வாருங்கள்” (மத் 22:4) என்று அழைப்பு விடுத்துக் கூட்டிவரவும் பணித்தார். கடவுள் நம்மிடம் ஒப்படைத்துள்ள தூதுரைப் பணியின் மற்றுமொரு முக்கிய அம்சத்தை இங்குக் காண்கிறோம். அரசரின் பணியாளர்கள், அவர் விடுத்த அழைப்பை விரைவாக மட்டுமல்ல, அதற்குரிய மரியாதையோடும் நல்லெண்ணத்தோடும் எடுத்துச்சென்றனர். அதுபோன்றே படைப்பனைத்திற்கும் நற்செய்தி அறிவிக்கும் பணிச் செயல்பாட்டில் இயேசுவின் பாணியை நாமும் பின்பற்ற வேண்டும். இயேசு கிறீஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலில் வெளிப்படுத்தப்பட்ட மீட்பளிக்கும் இறையன்பின் மேன்மையை உலகிற்குப் பறைசாற்றும்போது, தூதுரைப் பணியாளர்கள், தங்களில் செயல்படும் தூய ஆவியாரின் கனிகளான மகிழ்ச்சி, கனிவு நட்பிணக்கம் ஆகிய பண்புகளுடன் செயல்படவேண்டும்(காண். கலா 5:22); நிர்ப்பந்தித்தோ, கட்டாயப்படுத்தியோ, மதமாற்ற எண்ணத்துடனோ அல்ல. அவ்வாறின்றி, உறவு நெருக்கம், பரிவிரக்கம், கனிவு ஆகியவற்றால் நிறைந்து இறைவனுக்கே உரிய இருத்தல் மற்றும் செயல்படும் முறையைப் பிரதிபலிக்க வேண்டும்

2. “திருமண விருந்துக்கு”

**கிறிஸ்து மற்றும் திருஅவையினுடைய தூதுரைப் பணியின் நிறைவுக் கால மற்றும் நற்கருணைசார் பரிமாணம் -** திருமண விருந்து உவமையில், அரசர் தம் மகனுக்கு நடத்திய விருந்திற்கு, தம் பணியாளர் வழியாக அழைப்பு விடுக்கிறார். அந்த விருந்து நிறைவுக் கால விருந்தின் பிரதிபலிப்பே. அது, இறையாட்சியில் மலரும் இறுதி மீட்பின் நிழலாகும். இறைமகனும் மெசியாவுமான இயேசுவின் வருகையில் அது நிறைவேறியது. ஆகவேதான், தம் வருகையின் வழியாக அவர் நமக்கு நிறைவாழ்வு தந்தார். (காண். யோவா 10:10). ஆண்டவர் அளிக்கும் சுவைமிக்க பண்டங்கள் நிறைந்த மாபெரும் விருந்தில் இந்த நிறைவாழ்வு அடையாளப்படுத்தப்படுகிறது. அப்போது ஆண்டவர் என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார். (காண். எசா 25:6-8).

இயேசு தம் பணியின் தொடக்கத்திலேயே, “காலம் நிறைவேறிவிட்டது; இறையாட்சி நெருங்கிவிட்டது” (மாற் 1: 15) என்று முழங்கினார். கிறிஸ்துவின் தூதுரைப் பணி, நிறைவுக் காலத்துடன் தொடர்புடையது என்பது இதிலிருந்து புலப்படுகிறது. தங்கள் ஆண்டவரும் போதகருமான கிறிஸ்துவின் தூதுரைப் பணியைத் தொடர்ந்தாற்றவே அவருடைய சீடர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, திருஅவையின் தூதுரைப் பணியினுடைய ஒரு முக்கியப் பண்பு, நிறைவுக் காலத் தன்மையை உள்ளடக்கியது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது. “இவ்வாறு, ஆண்டவரின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலமே நற்செய்தி அறிவிப்புப்

பணிக்குரிய காலமாகும்.... ஏனெனில், ஆண்டவர் வருமுன் நற்செய்தி எல்லா மக்களினத்தார்க்கும் அறிவிக்கப்பட வேண்டும்.'' (காண். மாற் 13:10, திருஅவையின் நற்செய்திப் பணி, எண் 9).

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் தூதுரைப் பணியார்வத்தின் ஒரு பரிமாணம், நிறைவுக் காலம் பற்றிய போதனையை உள்ளடக்கியது என்பதை நாம் அறிவோம். நற்செய்தி அறிவிப்பின் அவசரத்தை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இன்றும் அதே அணுகுமுறையுடன் நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தொடர்வது இன்றியமையாதது. 'ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்' என்பதை அறிந்தவர்களுக்கு, மகிழ்ச்சியுடன் நற்செய்தி அறிவிக்க, இந்த அணுகுமுறை பெரிதும் உதவும். நிறைவுக் காலமெனும் இலக்கு நோக்கி எதிர்நோக்குடன் முன்னேறிக் கொண்டிருப்போருக்கும் இது பயன் தரும். அந்த நிறைவுக் கால நிகழ்வின்போது இறையாட்சியில் வழங்கப்பெறும் கிறிஸ்துவின் திருமண விருந்தில் நாமனைவரும் பங்கேற்று மகிழ்வோம். மிகை நுகர் போக்கு, சுயநலத்தில் ஊறிய சொகுசு வாழ்வு, செல்வம் சேர்த்தல், தனிநபர் முதன்மையியம் என்கிற 'பெரு விருந்துகளை' இவ்வுலகம் நம் கண்முன் நிறுத்தி அவற்றின்மேல் பற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. ஆனால் நற்செய்தியானது மகிழ்ச்சி, பகிர்வு, நீதி, இறைவனுடனும் பிறருடனும் இயைந்த தோழமை உறவு ஆகியவற்றை உள்ளடக்கிய 'இறைவன் வழங்கும் பெரு விருந்தில்' பங்கேற்க அழைக்கிறது.

கிறிஸ்து தரும் கொடையாகிற நிறைவாழ்வு, நற்கருணை விருந்தில் எதிர்நோக்காக நமக்கு அருளப்படுகிறது. இதைத்தான் ஆண்டவர் தந்த ஆணையின்படி 'அவர் நினைவாக'த் திருஅவை கொண்டாடுகிறது. நற்செய்தி அறிவிப்புப் பணியின் வழியாக அனைவருக்கும் நாம் விடுக்கும் நிறைவுக்கால விருந்திற்கான அழைப்பு, நம் ஆண்டவர் நம்மை உண்ணச் செய்யும் இறைவாக்கு விருந்து மற்றும் நற்கருணை விருந்துடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. ''ஒவ்வொரு நற்கருணைக் கொண்டாட்டமும் அருள் அடையாள முறையில் இறைமக்களின் நிறைவுக் கால கூடுகையை நிறைவேற்றுகிறது. நாம் கொண்டாடும் நற்கருணை விருந்து, இறைவாக்கினர் முன்னுரைத்த இறுதிப் பெருவிருந்தின் மெய்யான முன்சுவையாகும். (காண்.எசா 25: 6-8). இதனை, புனிதரின் உறவு ஒன்றிப்பின் மகிழ்ச்சியில் நாம் கொண்டாடவிருக்கும் புதிய ஏற்பாட்டு 'ஆட்டுக்குட்டியின் திருமண விருந்து' விவரிக்கிறது. (திவெ 19:9,அன்பின் அருள்சாதனம், எண் 31)

எனவே, ஒவ்வொரு நற்கருணைக் கொண்டாட்டத்தையும் ஆழ்ந்து அனுபவிக்க நாம் அழைக்கப்படுகிறோம். - அதன் அனைத்துப் பரிமாணங்களுடன் - குறிப்பாக, அதன் தூதுரைப் பணி மற்றும் நிறைவுக் காலப் பரிமாணங்களுடன் - இது தொடர்பாக நான் வலியுறுத்த விரும்புவது: ''எல்லா மக்களினத்தாரையும் சென்றடைய வேண்டியதும் இறைவனுடைய இதய ஆழத்திலிருந்து புறப்படுவதுமான தூதுரைப் பணியின்பால்

கவர்ந்திழுக்கப்படாமல் நாம் நற்கருணை மேசையை அணுக முடியாது.'' (அன்பின் அருள்சாதனம், எண் 84) கோவிட் பெருந்தொற்றுக்குப் பிந்தையை காலத்தில் தலத் திருஅவைகள், அனைவரும் பாராட்டும் விதத்தில், இறைமக்களின் நற்கருணைக் கொண்டாட்ட பங்கேற்பை ஊக்குவிக்கின்றன. நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் தூதுரைப் பணியை ஈடுபாட்டுடன் தொடர்ந்தாற்றும் ஆர்வத்திற்குப் புத்துயிரூட்ட இது மிக இன்றியமையாதது. ''ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்; உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்'' என்று ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டத்திலும் அறிக்கையிடுகிறோமே, அந்த உண்மையை மிகுந்த நம்பிக்கையுடனும் உள்ளார்ந்த உற்சாகத்துடனும் அறிக்கையிடவேண்டுமல்லவா?

யூபிலி2025 நிகழ்விற்கு சிறப்பாகத் தாயாரிக்க, இறைவேண்டுதல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஆண்டில் திருஅவை தொடர்ந்தாற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் உங்களை அர்ப்பணியுங்கள். திருஅவை, மீட்பரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொரு திருப்பலி மற்றும் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திலும் 'உமது ஆட்சி வருக' என்ற விண்ணப்பத்தை உள்ளடக்கிய 'விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே' என்கிற மன்றாட்டைச் செபிக்கத் தவறுவதில்லை. இவ்வாறு நம் அன்றாட வேண்டுதல்களும், நற்கருணைக் கொண்டாட்ட பங்கேற்பும், நம்மை எதிர்நோக்கின் திருப்பயணிகளாகவும் தூதுரைப் பணியாளர்களாகவும் ஆக்குகின்றன. இந்த எதிர்நோக்கோடுதான் இறைவனில் நாம் பெறவிருக்கும் நிலைவாழ்வை நோக்கி, தம் பிள்ளைகளுக்குத் தந்தை இறைவன் தயார் செய்துள்ள 'ஆட்டுக்குட்டியின் திருமண விருந்து' நோக்கிப் பயணிக்கிறோம்.

3. ''எல்லாரையும்''

## முழுமையான கூட்டியக்கமாக தூதுரைக்கும் திருஅவையில் கிறிஸ்துவின் சீடர்களின் உலகளாவிய தூதுரைப் பணி -

திருமண விருந்து உவமையில் அரசரின்அழைப்பு 'எல்லாருக்குமானது' என்பதே நம் சிந்தனையின் மூன்றாம் பகுதி. நான் முன்னரே வலியுறுத்தியுள்ளதுபோல, ''யாரும் விடுபட்டுவிடக் கூடாது என்பதே தூதுரைப் பணியின் முக்கிய நோக்கம், அதுவே இலக்கு. நம் தூதுரைப் பணிகள் அனைத்தும் கிறிஸ்துவின் இதய ஆழத்தினின்றே பிறக்கின்றன. எதற்காக? 'அனைவரையும் அவர்பால் ஈர்த்துக்கொள்ளவே. '' (திருத்தந்தையின் தூதுரைப் பணிக் கழகங்களின் பொது அமர்வில் உரை. 3 ஜீன் 2023) பல முரண்பாடுகளாலும் பிரிவினைகளாலும் பிளவுண்டு கிடக்கிற இன்றைய உலகில், கிறிஸ்துவின் நற்செய்தி, மானிடர் ஒருவரை ஒருவர் நேரிடையாக எதிர்கொண்டு சந்திக்க, ஒவ்வொருவரையும் மென்மையாக, ஆனால் உறுதியுடன் அழைக்கிறது; அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள், சகோதரிகள் என்று அடையாளம் கண்டுகொண்டு, வேற்றுமையிலும்

இணக்கமான ஒற்றுமை கண்டு மகிழ அழைக்கிறது. ஏனெனில்,‘‘எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் அவர் விரும்புகிறார்,’’ (1 திமொ 2:4) எனவே, நமது தூதுரைப் பணிச் செயல்பாடுகளில், நற்செய்தியை 'அனைவருக்குமே' அறிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளோம் என்பதை மறந்துவிடக் கூடாது.' புதிய கட்டுப்பாடுகளை விதிக்கிறவர்கள்போல் தோன்றுவதற்குப் பதிலாக, அழைப்புப் பெறுபவர்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள விரும்புபவர்களாக, இறை அழகின் தொடுவானத்தைச் சுட்டிக்காட்டுபவர்களாக, சுவைமிக்க பண்டங்கள் நிறைந்த பெரு விருந்திற்கு அழைப்பவர்களாகச் செயல்பட வேண்டும்.’’ (நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 14)

அனைவரும் அழைப்புப் பெற்றவர்களே. அவர்களின் சமூக நிலை, ஒழுக்க நிலை எப்படியிருப்பினும், கிறிஸ்துவின் தூதுரைப் பணியாளர்கள், அவர்கள்மீது எப்போதும் உள்ளார்ந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். உவமையில் வரும் அரசரின் கட்டளையை ஏற்ற பணியாளர்கள், ‘‘வழியில் கண்ட நல்லோர், தீயோர் யாவரையும் கூட்டி வந்தார்கள்.’’ (மத் 22:10). ‘‘ஏழையர், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர்’’ (லூக் 14:21) என எல்லா நிலையினரையும் கூட்டி வந்தார்கள். சுருங்கக்கூறின், சமுதாயத்தில் மிகச் சிறியோர் எனக் கருதப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர் ஆகியோரே அரசரின் சிறப்பு விருந்தினர்கள். நம் ஒவ்வொருவர்மீதும் கடவுள் காட்டும் பேரன்பு அளவற்றதும் நிபந்தனையற்றதுமாயிருப்பதால், அவர், தம் மகன் திருமணத்திற்குத் தயார் செய்திருக்கும் பெரு விருந்து, அனைத்துத் தரப்பினருக்கும் உரியது. ‘‘தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்.’’ (யோவா 3:16) ஆம், ஆண், பெண் ஒவ்வொருவரும் கடவுளின் அருளில் பங்கேற்க அழைக்கப்பெற்றுள்ளார்கள். இந்த அருள்தான் அவர்களை உருமாற்றி மீட்பை வழங்குகிறது. நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது ஒன்றே. இலவசமாகக் கிடைக்கும் இறையருள் என்னும் அந்தக் கொடையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைத் 'திருமண ஆடையாக' அணிந்துகொண்டு அதன் வழியாக உருமாற்றம் அடைய நம்மைக் கையளிக்க வேண்டும்.

'அனைவருக்கும்' நற்செய்தி அறிவிக்க, நம் 'அனைவருடைய' உள்ளார்ந்த அர்ப்பணம் தேவைப்படுகிறது. இப்பணியில், முழுமையான கூட்டியக்கத் திருஅவையாக, தூதுரைப் பணியாற்றும் திருஅவையாக, நாம் பயணிக்கத் தொடங்க வேண்டும். தூதுரைப் பணி, அடிப்படையில் கூட்டியக்க இயல்புடையது. எனவே, உலகளாவிய திருஅவையிலும் தலத் திருஅவைகளிலும் இன்று மிக அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுவது, ஒருங்கிணைந்த தூதுரைப் பணி ஒத்துழைப்பாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அடிச்சுவடுகளையும் எனக்கு முன்னைய திருத்தந்தையர்களின் செயல்முறைகளையும் கருத்தில் கொண்டு உலகின் அனைத்து மறைமாவட்டங்களுக்கும் நான் பரிந்துரைப்பது:

திருத்தந்தையின் தூதுரைப் பணிக் கழகங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ‘‘ஏனெனில், குழந்தைப் பருவம் தொடங்கிக் கத்தோலிக்கரை உண்மையான அனைத்துலக உணர்விலும், நற்செய்தி அறிவிப்புப் பணி உணர்விலும் தோய்ந்திருக்கச் செய்வதற்கும், நற்செய்தி அறிவிக்கப்படும் எல்லா நாடுகளுக்கும் பயன்படுவதற்காக, அவை ஒவ்வொன்றின் தேவைகளுக்கு ஏற்ப, தகுந்த அளவு நிதி திரட்டுவதற்கும் மேற்கூறிய கழகங்களின் செயல்பாடுகள், வழிகளாக அமைகின்றன.’’ (திருச்சபையின் நற்செய்திப்பணி, எண் 38). இந்த நோக்கத்திற்காகவே, உலக தூதுரைப் பணி நாளன்று எல்லாத் தலத் திருஅவைகளிலும் திரட்டப்படும் நிதி, உலகளாவிய நிதித் தொகுப்பிற்கு அனுப்பப்படுகிறது. அந்த நிதியை திருத்தந்தையின் நற்செய்தி அறிவிப்புக் கழகம், திருத்தந்தையின் பெயரால், உலகளாவிய திருச்சபையின் தூதுரைப் பணிச் செயல்பாடுகளுக்கென பகிர்ந்தளிக்கிறது. நாம் இன்னும் அதிகமாக, கூட்டியக்கச் செயல்பாடுகளில் ஈடுபடவும் தூதுரைப் பணியாற்றும் திருஅவையாகச் செயலாற்றவும், வழிகாட்டி உதவிட இறைவனிடம் வேண்டுவோமாக.

இறுதியாக, நம் பார்வையை அன்னை மரியாமீது பதியவைப்போம். அவர்தான், குறிப்பாக, யூதேயாவிலுள்ள கானாவில் நடைபெற்ற திருமண விருந்தின்போது, இயேசு தம் முதல் அரும் அடையாளத்தைச் செய்யத் தூண்டுதலாக இருந்தார். (காண்.யோவா 2:1-12). இயேசு, புதுமணத் தம்பதிக்கும் அந்தத் திருமணத்தில் பங்கேற்ற விருந்தினர்களுக்கும் புதிய, சுவை மிகுந்த திராட்சை இரசத்தை அபரிமிதமாக வழங்கினார். இது, நிறைவுக் காலத்தில் அனைவருக்கும் வழங்க, இறைவன் தாயார்செய்துகொண்டிருக்கும் தம் மகனுடைய திருமணப் பெரு விருந்தின் அறிகுறியாகும். இன்றைய நாள்களில், கிறிஸ்துவின் சீடர்கள் ஆற்றும் நற்செய்திப் பணி சிறக்க அன்னை மரியாவின் தாயன்பின் பரிந்துரையை இறைஞ்சிக் கேட்போமாக. நம் அன்னையினுடைய அன்பில் கனிந்திடும் அக்கறையில் நனைந்தவர்களாக, அவருடைய கனிவு. பாசம் ஆகியவற்றினின்று பிறக்கும் ஆற்றலைப் பெற்றவர்களாக (காண்.நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 288), நம் அரசரும் மீட்பருமான இறைவன் வழங்கும் பெரு விருந்திற்கான அழைப்பை அனைவருக்கும் கொண்டு சேர்ப்போமாக.

அன்னை மரியே!
நற்செய்தி அறிவிப்புப் பணியின் விண்மீனே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**உரோமை**

25 ஜனவரி 2024

**திருத்தந்தை பிரான்சிஸ்**